# 1983 පෙබරවාරි 9 වනදා ජනාධිපතිතුමා විසින් පාර්ලිමේන්තුව අමතා කළ කථාව

## 1983 பெப்புருவரி 9 ஆம் தேதி சனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்திற்கு ஆற்றிய உரை

# ADDRESS TO PARLIAMENT BY THE PRESIDENT ON 9th FEBRUARY, 1983

| | |
|---|---|
| පරි. අංක | 6559 |
| වර්ග අංකය | 808.51 |
| දිනය | |

ගරු මන්ත්‍රීවරුනි,

පළමුවැනි විධායක බල සහිත ජනාධිපති වශයෙන්, මා පාර්ලිමේන්තු වාරය විවෘත කළේ 1978 සැප්තැම්බර් 7 වැනිදයි. අද, 1983 පෙබරවාරි 9 වැනිද, විධායක බල සහිත දෙවැනි ජනාධිපතිවරයා වශයෙන්, මම පාර්ලිමේන්තු වාරය විවෘත කරනවා. මේ අවස්ථා දෙක අතරතුර, රටේ තත්ත්වය ගැන සසඳා බැලීම ප්‍රයෝජනවත් යැයි මා හිතනවා. 1978 ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව අනුව, ජනාධිපති මැතිවරණය 1983 අවසානයේ පැවැත්විය යුතුව තිබුණ ද. එය 1982 ඔක්තෝබර් මාසයේ පැවැත්වූවා. ඒ නිසා ජනාධිපති නිල කාල පරිච්ඡේදය එක අවුරුද්දකින් අඩු කරනු ලැබුවා.

පසුගිය ඔක්තෝබර් 20 වැනිදා පැවැති ජනාධිපති වරණයේ දී එක්සත් ජාතික පක්ෂය ජය ගත්තා. එහි ප්‍රතිඵලවලින් පෙන්නුම් කළේ, 1977 ජූලි 21 වැනිද අප විසින් ජනතාවට ඉදිරිපත් කරන ලද ක්‍රියා මාර්ගය, සපුරා ලීමට අප දරූ උත්සාහය මහජනතාව පිළිගත් බවයි.

1982 දෙසැම්බර් 22 වැනිද අපි ජනතාවගෙන් වරමක් ඉල්ලුවා. 1983 අගෝස්තුවේදී අවසාන විය යුතු පළමුවන පාර්ලිමේන්තුවේ කාලසීමාව, 1989 අගෝස්තු වන තුරු, 6 අවුරුද්දකින් දික් කිරීම අප ඉල්ලූ එම වරමයි. මේ ඉල්ලීම ජනතාව අනුමත කළා.

## 1977 න් පසු ලෝක ආර්ථික තත්ත්වය

අපේ මැතිවරණ ප්‍රකාශනයේ ඇතුළත් පොරොන්දු රාශියක් දැනටම ඉෂ්ට කරනු ලැබ තිබෙනවා. තවත් කීපයක් සැලකිල්ලට භාජනය කළයුතුව තිබෙනවා. අපේ මැතිවරණ ප්‍රකාශනයේ සෑම අකුරක් වචනයක් පාසාම ක්‍රියාත්මක කළත්, ලෝකයේ දියුණු නොදියුණු



සෑම රටකටම බලපාන ප්‍රශ්න අපටද බලපානවා. එම ප්‍රශ්නවලට අපට ද මුහුණ දෙන්නට සිදුවෙනවා. දියුණු රටවල ආර්ථික පීඩනයක් පවතිනවා. රැකීරක්ෂා හිඟය ඒ රටවල වැඩිවෙනවා. එසේම ඉන්ධන මිළ සහ පොලී වැඩිවෙමින් පවතිනවා; උද්ධමනය ඇති වී තිබෙනවා; විදේශ විනිමය අනුපාතය මොහොතින් මොහොත වෙනස් වෙමින් පවතිනවා. ලෝක වෙළඳාමේ තත්ත්වය පිරිහී තිබෙනවා. නොදියුණු රටවල ඉන්ධන හැර, අනිකුත් මූලික නිෂ්පාදනවල මිළ අඩු වී තිබෙනවා.

කෙටි කාලයක් තුල ලෝක ආර්ථිකයේ වාසිදයක වෙනසක් ඇතිවේ යැයි සිතීම අමාරුයි. මේ සියල්ල, ශ්‍රී ලංකාව ඇතුළු, දියුණුවන රටවල දුෂ්කරතාවයන් ඇතිකර තිබෙනවා. අපට සම්පූර්ණයෙන්ම පසමිතුරු වූ ජාත්‍යන්තර ආර්ථික වාතාවරණයක් තුල, අපේ වර්ධන උපක්‍රම සකස් කර ගැනීමටයි අපට සිදුවී ඇත්තේ. මෙබඳු තත්ත්වයක් යටතේ, දියුණුවෙමින් පවතින ඇතැම් රටවල පවතින ප්‍රගතිය විශේෂයෙන් සඳහන් කළ යුතුය. ශ්‍රී ලංකාව ඒ පිළිබඳව කැපී පෙනෙන සාධකයක්.

අමු බණිජ තෙල් ඇතුළු, ඉන්ධන නිෂ්පාදන ආනයනය කිරීම සඳහා වැඩිවන වියදම නිසා, විශාල වෙළඳ පරතරයක් ඇති වී තිබෙනවා.ඉන්ධන ආනයනය සඳහා, වැය වන ප්‍රමාණය අපේ සම්පූර්ණ ආනයන වියදමෙන් සියයට විසිපහක් පමණ වන අතර, අපනයන ආදය මෙන් සියයට හතලිස් දෙකක් ඒ සඳහා වියදම් වෙනවා. 1977 දී රුපියල් 144 ක් වූ තෙල් බැරලයක මිළ, 1982 දී රුපියල් හත්සිය දහඅටක් දක්වා ඉහල ගොස් තිබෙනවා.

බලශක්ති සම්බන්ධයෙන්, මිළ හා සැපයුම පිළිබඳ, බලවත් අර්බුදයකට අප මුහුණ පා තිබෙනවා. 1977 න් පසු, විදුලිබලය සඳහා කෙරෙන ඉල්ලීම නිෂ්පාදනයට වඩා විශාල අන්දමින් වැඩිවුනා. මේ නිසා දිනකට රුපියල් තිස්ලක්ෂයකට අධිකව වියදම් කරමින් "තර්මල් ජෙනරේටර්" පාවිච්චි කිරීමට අපට සිදු වෙනවා. 1977 ට පෙර "තර්මල් ජෙනරේටර්" පාවිච්චි කිරීමේ ප්‍රමාණය සියයට 2 ක් වූ අතර, 1981 දී සියයට 16 දක්වා වැඩි වී තිබෙනවා. එක අතකින් බලන විට මෙසේ ඉන්ධන අවශ්‍යතාවයන් සහ පාවිච්චිය වැඩිවීම,

සමාජ හා ආර්ථික ප්‍රගතිය පෙන්නුම් කරන ලකුණක්.

බාහිර හා අභ්‍යන්තර හේතූන් නිසා ඇතිවූ ගෙවීම් පිළිබඳ තුලනතාවය පරිහානියට පත්වීම අපට මුහුණ පාන්නට සිදු වී ඇති ප්‍රශ්නවලින් එකක්. ආනයන ප්‍රමාණය සියයට එකසිය පණහකින් වැඩි වී තිබෙන අතර, අපනයන ප්‍රමාණය වැඩි වී ඇත්තේ සියයට හතලිහකටත් අඩුවෙන්. මෙම අසමතාවයට හේතු වූ කරුණු බොහොමයක් අපට කොහොමවත් පාලනය කරන්නට බැහැ.

දියුණු රටවලින් අපනයනය කරන ද්‍රව්‍යවල මිළ බෙහෙවින් වැඩි වී තිබෙනවා. මෙම මිළ හා සසඳන විට නොදියුණු රටවලින් අපනයනය කරන අමුද්‍රව්‍යවලට ගෙවන මිළ වැඩිවී නැහැ. අපේ අපනයන ද්‍රව්‍යවලට ද ලැබෙන්නේ එවැනි අඩුමිළක්. 1977/81 වකවානුව තුල උද්ධමනය සීඝ්‍රයෙන් වැඩිවුනා. එහෙත් 1982 වර්ෂයේ දී ශ්‍රී ලංකාවේ උද්ධමනය පාලනය කරන්නට හැකිවුනා.

දිගින් දිගටම ඇති වූ අයවැය පරතරය නිසා බැංකුවලින් ණය ගැනීමට අපට සිදුවුනා. ජීවන වියදම අනතුරුදායක ප්‍රමාණයකට වැඩිවුනා. අපට කළහැකි වූ එකම දෙය වූයේ, ජනතාවට මේ ජීවන වියදමට මුහුණ පෑමට හැකි වන අන්දමින්, වැටුප් ලැබෙන සේ රැකියා සුලබ කිරීමයි.

## නිවහල් සමාජයක්

අපේ මැතිවරණ ප්‍රකාශනයේ යෝජනා පිඩුකොට ගත් විට, අපේ පරමාර්ථය නිවහල් ධර්මිෂ්ඨ සමාජයක් ගොඩ නැංවීම බව පැහැදිලි වෙනවා. නිවහල් සමාජයක් සඳහා අවශ්‍ය ප්‍රජාතාන්ත්‍රික නිදහස සහ ආරක්ෂාවන්, අපි 1978 ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවට ඇතුලත් කළා. ප්‍රජාතන්ත්‍රවාදී රටක, මූලික පදනම වන්නේ, වරින් වර මහමැතිවරණයක දී රජයක් පිහිටුවීමට හෝ පරාජය කිරීමට ඡන්ද බලය ජනතාවට සහතික කිරීමයි. මීට පෙර තිබූ ව්‍යවස්ථාවන් අනුව, අවුරුදු දෙකකට හෝ ඊට වැඩි ඕනෑම කාලයකට, පාර්ලිමේන්තුවේ කාල සීමාව දික් කිරීමට වුවමනා වූයේ, මන්ත්‍රීවරුන්ගෙන් තුනෙන් දෙකක ඡන්දය ලබාගැනීම පමණයි. 1973

නොවැම්බර් 28 වැනිද හැන්සාඩ් වාර්තාවේ සඳහන් වී ඇති අන්දමට, තුනෙන් දෙකක වැඩි ඡන්දයෙන්, පාර්ලිමේන්තුවේ කාලසීමාව, ජීවිතාන්තය දක්වා වුවද, දිගු කළ හැකි බව, කියා තිබෙනවා.

1978 ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවෙන් මෙය අහෝසි කරනු ලැබුවා. ජනාධිපතිතුමාගේ හෝ පාර්ලිමේන්තුවේ නිල කාලය දිගු කළ හැක්කේ, ජනමත විචාරණයකින් පමණක් බව, එහි ස්ථිරවම සඳහන් වෙනවා. ජනතාවගේ ඡන්ද බලයට කිසිසේත් අත තැබීමට ජනමත විචාරණයකින් මිස, අවසරයක් ලැබෙන්නේ නැහැ. එසේම පළමුවැනි වතාවට ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවට ඇතුළත් කළ මූලික අයිතිවාසිකම් ද, ජනමත විචාරණයකින් තොරව ඉවත් කරන්නට බැහැ.

මීට පෙර ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවල නොතිබූ ආරක්ෂා වන් රාශියක්ම 1978 ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවට ඇතුළත් කර තිබෙනවා. මෙන්න උදහරණ : හදිසි නීති යටතේ පාලනය ගෙන යා හැක්කේ පාර්ලිමේන්තුවේ අනුමැතිය ඇතිව පමණයි. තුන් මසකට වඩා හදිසි නීතිය දික් කරන්නේ නම්, පාර්ලිමේන්තුවේ තුනෙන් දෙකක වැඩි ඡන්ද ලබාගත යුතුයි. මීට පෙර හදිසි නීතිය පැනවූ විට කරන ලද්දේ පාර්ලිමේන්තුවට දැනුම් දීම පමණයි. පාර්ලිමේන්තුවේ විවාදයකටවත් ඉඩ නොදී, 1971 සිට හය අවුරුද්දක්, හදිසි නීතිය යටතේ මේ රට පාලනය කරනු ලැබුවා.

## ධර්මිෂ්ඨ සමාජයක්

ධර්මිෂ්ඨ සමාජයක් ඇති කිරීම මීට වඩා දුෂ්කර කාර්යයක්. නීතිරීති වලින් හෝ රජයේ කටයුතුවලින් හෝ පමණක් එබඳු සමාජයක් ඇති කරන්නට බැහැ. ධර්මිෂ්ඨ සමාජයක් වශයෙන් අප සලකන්නේ තමන්ට අවශ්‍ය වන ආහාර, ඇඳුම් පැළඳුම්, හා නිවාස සඳහා වුවමනා කරන මුදල් ජනතාවට ලැබෙන සමාජයක්. මෙය සාර්ථක කරගත හැක්කේ කෙනෙකුගේ උත්සාහයෙන්; එසේ නැතහොත් රජයේ හෝ පෞද්ගලික සේවා යෝජකයෙකු යටතේ රැකියාවක් කිරීමෙන්. එවිට රැකීරක්ෂා හිඟය නැතිවිය යුතුයි. එසේ නොවන්නේ නම් එය නැති කිරීමට පියවර ගත යුතුයි. රැකියාවක් කළ හැකි සැම පුරවැසියෙකුටම රැකියාවක් සොයා ගැනීමට අවස්ථාව තිබිය යුතුයි.

මේ අනුව අපේ ඉතිහාසයේ විශාලතම සංවර්ධන වැඩ පිළිවෙල අප ආරම්භ කර තිබෙනවා. ධනය නිපදවිය හැක්කේත්, එනයින් රැකීරක්ෂා ඇති කළ හැක්කේත්, සංවර්ධනයෙන් පමණයි. එසේම රටේ සම්පත් ජනතාව අතර සාධාරණ ලෙස බෙදී යා යුතුයි. මේ සංවර්ධන යෝජනා ක්‍රම සඳහා අප වියදම් කිරීමට බලාපොරොත්තුවන මුදල රුපියල් දහතුන්දහස් පන් සිය එකොළොස් කෝටියක් පමණ වෙනවා.

ධර්මිෂ්ඨ සමාජයක පරමාර්ථය ඉටුකර ගැනීම සඳහා, ප්‍රතිසංවිධානය කරන ලද ආර්ථිකය අනුව, අප මේ සංවර්ධන කටයුතු හැඩගැස්විය යුතුයි. ජනසතු කරන ලද නිෂ්පාදනයේ බෙද හැරීමේ හා හුවමාරු කිරීමේ මාර්ග නොවෙනස් වී එසේම පවතිනවා ඇති.

පාර්ලිමේන්තුවේ අපේ මන්ත්‍රීවරුන් සඳහා අප සකස් කළ චරියා ධර්ම පද්ධතිය ක්‍රියාත්මක කර තිබෙනවා. ඇමතිවරුන්ට හෝ මන්ත්‍රීවරුන්ට විරුද්ධව චෝදනා ඔප්පු වුවහොත් ඔවුන් ගැන යථා පරිදි ක්‍රියා කිරීම තවදුරටත් කරගෙන යන්නට අප බලාපොරොත්තු වෙනවා.

ආගමික හා අධ්‍යාත්මික විශ්වාසයන්ට හා ආයතනයන්ට, තමන්ගේ ධර්මය දේශනා කිරීමට මෙන්ම ප්‍රගුණ කිරීමට, ආධාර උපකාර ලබා දී තිබෙනවා.

මීට පෙර නොවූ විරූ අන්දමින්, බුද්ධ ශාසනයට රජයේ අනුබලය සහ අනුග්‍රහය ලැබෙනවා. ජාතික හා සංස්කෘතික අංශයට ද එපරිද්දෙන්ම ආධාර අනුබල ලැබෙනවා.

## 1978 සිට 1982 දක්වා රටේ පැවති තත්ත්වය

1978 සිට 1982 දක්වා වූ පස් අවුරුදු කාලය අපට ආණ්ඩු කිරීමට බලය ලැබුණු කාලයට වඩා අවුරුද්දකින් අඩුයි. එහෙත් ඒ කාලය තුල වෙනස්කම් රාශියක් ඇති කිරීමට අප සමත් වුනා. රටක ආර්ථික තත්ත්වය මනිනු ලබන්නේ ආර්ථිකයේ වර්ධන වේගය අනුවයි. 1970 සිට 1977 දක්වා සියයට 3.5 කට සීමා වූ ශ්‍රී ලංකාවේ වාර්ෂික වර්ධන වේගය, පසුගිය අවුරුදු 5 ඇතුලත දී සියයට 6 ක් ඉක්මවා තිබුනා. මෙය දියුණුවන රටවල සාමාන්‍ය වර්ධන වේගයට වඩා

බොහෝ ඉහල බව පෙන්වා දිය යුතුයි. එද දළ දේශීය නිෂ්පාදිතයෙන් සියයට 14 ක් පමණ වූ ආයෝජනය සියයට 28 දක්වා වැඩි කරනු ලැබුවා. පසුගිය අවුරුදු පහ ඇතුලත එකොලොස් ලක්ෂ විසිදාහකට අළුතෙන් රැකියා ලැබුනා.

මේ පරමාර්ථය මුදුන්පත් කර ගැනීම සඳහා සීමා සහ පාලනයන් රාශියක් ඉවත් කිරීමට සිදුවුනා. ඒ වෙනුවට නිදහස් වෙළඳ ක්‍රමයක් හඳුන්වා දෙනු ලැබුවා. සහනාධාර සඳහා ගෙවන ලද මුදල්වලින් කොටසක් ආයෝජනය සඳහා වෙන් කළා. මෙසේ නොකරන ලද්දේ නම් සහනාධාර වියදම අහස උසට නැගී, එද සහනාධාර ක්‍රමයට ලබාදෙන ලද හාල්, පිටි, සීනි, කිරි ආහාර සහ ඛනිජ තෙල් ආදිය සඳහා දරන්නට වන සහනාධාර වියදම, කිසිම අයවැය ලේඛනයකට උසුලන්නට බැරි තරම් වෙනවා.

මෙපරිද්දෙන් සහනාධාර ඉවත් කළද, ආහාර මුද්දර, කිරි ආහාර, ප්‍රවාහන ගාස්තු, භූමිතෙල්, පොහොර සහනාධාර, නොමිළයේ පාසැල් පොත් ආදිය මගින්, සමාජයේ ඉතාම දුප්පත් ජනතා කොටස් වෙනුවෙන්, වෙන් කර ඇති සහනාධාර සඳහා, වැයවන මුදල, වර්ෂයකට රුපියල් කෝටි තුන්සියයක් පමණ වෙනවා. නිදහස් අධ්‍යාපනය හා නිදහස් සෞඛ්‍ය සේවය දිගටම පැවැත්වෙනවා ඇති.

සහනාධාර නොදී වුවද ජනතාවට අවශ්‍ය සියලුම සේවාවන් හා භාණ්ඩ සැපයීමට රජයට පුළුවන්කමක් නැහැ. ඒ නිසා ප්‍රවාහන සේවා, බෙහෙත් ද්‍රව්‍ය, මූලික ආහාර ද්‍රව්‍ය ආනයනය කිරීම ආදී ඇතැම් සේවාවන් හා භාණ්ඩ, මුදල් අයකර සැපයීම සඳහා පෞද්ගලික අංශයට අවස්ථාව ලබා දුන්නා. ප්‍රවාහන සේවාව උදහරණයක් වශයෙන් ගනිමු. ලෝක බැංකුවේ ආධාර යද ඇතිව, රජය වාහන එක්දස් පන්සියයක් ආනයනය, කළද, ප්‍රවාහනය සඳහා අවශ්‍ය සියලුම වාහන ගෙන්වීමට රජයට පුළුවන්කමක් නැහැ. පෞද්ගලික අංශය මගින් වාහන හත්දහක් පිටරටින් ගෙන්වා තිබෙනවා. මේ වාහන රජයේ වාහනත් සමග තරග කරමින් මගීන්ගේ පහසුව සඳහා ධාවනය වෙනවා.

විනිමය ගනුදෙනුවල හොරකඩය අහෝසි කිරීම සඳහා රුපියලේ නියම ජාත්‍යන්තර වටිනාකම තහවුරු වන සේ පවත්වාගෙන යාමට අප ඉඩ හැරියා.

අපේ සුළු අපනයන භෝග නිෂ්පාදකයන්ට මේ නිසා ලැබුණේ ලොකු වාසියක්. ගම්මිරිස්, කුරුඳු, දුම්කොළ, කජු, බුලත්, කෝපි, කොකෝවා, කරඳමුංගු හා කරාබු නැටි ආදිය සඳහා හොඳ මිලක් ලැබෙන අතර, ඒවා නිෂ්පාදනය කරන අයට හා පිටරට යවන අයට හොඳ ආදායමක් ලැබෙනවා. එහෙත් විටින් විට ප්‍රශ්න මතුවෙනවා. උදාහරණයක් වශයෙන් අපේ කුරුඳු මිළට ගන්නා එකම රට වූ මෙක්සිකෝවේ පවතින මුදල් අමාරුකම් නිසා එම රට කුරුඳු මිළයට ගැනීම නවත්වා තිබෙනවා.

වී නිෂ්පාදනය අවුරු දෙන් අවුරුද්ද ඉහළ ගිය අතර 1981 – 82 මහ කන්නයේ සහ 1982 යල් කන්නයේත් අස්වනු ප්‍රමාණය බුසල් දසකෝටි විසිපත් ලක්ෂයකට ආසන්න වී ඇති බව වාර්තා වෙනවා.

කර්මාන්ත ගැන සලකන විට, මහකොළඹ ආර්ථික කොමිසමට අයත්, නිදහස් වෙළඳ කලාපයේ අනුමත කර ඇති කර්මාන්ත සංඛ්‍යාව 155 කි. 1982 අවසානයේ දී එයින් 52 ක නිෂ්පාදන කටයුතු ඇරඹී තිබූ අතර, එහි කෙලින්ම රක්ෂාව කරන අයගේ සංඛ්‍යාව විසිහයදහක් සහ ඒ මාර්ගයෙන් වෙනත් රැකියාවන් ලබාගත් සංඛ්‍යාව හතලිස් පන්දහක් පමණ වෙනවා. මේ හැර ඒ කලාපයෙන් පිට කර්මාන්ත 106 කට අනුමැතිය ලබා දී තිබෙනවා. මේවායේ දහදහකට රක්ෂාව ලැබේයැයි අපේක්ෂා කරනවා.

රජයේ සංස්ථා සමහරක ප්‍රතිඵල සතුටුදායක වන අතර, තවත් සමහරක නිෂ්පාදනය බලාපොරොත්තු වූ තරම් සිදුවී නැහැ. කෙසේ වුවද පසුගිය කාලයට වඩා මේ හැම එකකම කටයුතු සාර්ථක වී තිබෙනවා.

නිවාස අමාත්‍යාංශයත් නගර සංවර්ධන අධිකාරියත්, රජයේ ආධාර ඇතිව සහ නැතිව ඉදිකර නිමවන ලද නිවාස සංඛ්‍යාව ලක්ෂයක් පමණ වෙනවා.

සීඝ්‍ර මහවැලි සංවර්ධන යෝජනා ක්‍රමයේ ප්‍රධාන බැම්වල වැඩ 1986 දී අවසාන වෙනවා. එනම්, මාදුරුඔය 1983 දී ත්, වික්ටෝරියා 1984 දී ත්,

කොත්මලේ 1985 දීත්, රන්දෙනිගල 1986 දීත්, අවසාන කිරීමට බලාපොරොත්තු වෙනවා.එසේම එම යෝජනා ක්‍රමය යටතේ ඉඩම් සංවර්ධනය ද සම්පූර්ණ කිරීමට බලාපොරොත්තු වෙනවා.

රටේ සම්පත් සීඝ්‍රයෙන් වර්ධනය කිරීම රජයට පමණක් කළ නොහැකියි. මේ නිසා පුද්ගලික ධන ආයෝජකයන්ටද රජයත් සමග උරෙන් උර ගැටී රට සංවර්ධනය කිරීමට අප අවස්ථාව ලබා දුන්නා. රජයේ අංශවලට පුද්ගලික අංශ සමග තරඟ කරන්නට අප අවස්ථාව සලසා තිබෙනවා. මේ තරඟයේ වාසිය ලැබුනේ පොදු ජනතාවට සහ පාරිභෝගිකයාටයි. ඒ නිසා මේ තරඟය දිගටම ගෙන යාමයි අපේ බලාපොරොත්තුව වන්නේ.

මා මෙහි සඳහන් කළේ ප්‍රධාන සංවර්ධන ව්‍යාපාර කීපයක් ලබා ඇති ප්‍රගතිය ගැනයි.

ලෝකයේ දියුණු රටවල් ආර්ථික පීඩනයකට ගොදුරු වී, එම රටවල තිස්කෝටියක ජනතාවගේ රැකීරක්ෂා අහිමි වෙමින් පවතින වටා පිටාවක ලබන ලද මෙම ප්‍රගතිය, සුළුපටු කොට නොතැකිය යුතු බැව් මෙහිලා සඳහන් කළ යුතු ය. ශ්‍රී ලංකාවේ රැකීරක්ෂා නැති අයට රක්ෂාවල් ලැබුණු අතර ඉතිහාසයේ කවදවත් නොදුටු විරූ අන්දමේ වේගවත් සංවර්ධනයක් ඇති වුනා.

1977 දී රටේ ආර්ථිකය සුනුවිසුණු වී ගොස් තිබුනා. ප්‍රජාතන්ත්‍රවාදයේ බෙල්ල මිරිකා තිබුනා. තරුණයින් සිටියේ සිර ගෙවල්වල. හදිසි නීතිය දේශපාලන විරුද්ධවාදීන් විනාශ කිරීමට යොදවා තිබුනා. අප ප්‍රජාතන්ත්‍රවාදය යළිත් එයට හිමි අග්‍රස්ථානයට පත් කළා. ආර්ථිකය යහපත් අතට හැරීගෙනඑනවා.රැකියා නැතිව සිටි අය අද රැකියාවල යෙදෙමින් හිස ඔසවාගෙන පාරේ ගමන් කරනවා. ලෝක ආර්ථික රටාවෙන් මිදී කුසගින්නෙන් පීඩා නොවිඳින්නට ඇති සහතිකය ඔවුන්ගේ ආදායමයි. අද පවතින තත්ත්වය අනුව අප තෝරාගත් මාර්ගය හැර වෙන මාර්ගයක් නැහැ. ජනතාව මේ මාර්ගය නිවැරදි යයි පිළිගෙන තිබෙනවා. අප සතු යුතුකම ජනතාව අප තුල තැබූ ඒ විශ්වාසය තහවුරු කිරීමයි.

## අනාගතය

අප විසින් කළ යුතුව ඇත්තේ, ලැබූ වාසි මත ප්‍රගතිය ගොඩ නගන අතර, දුර්වලකම් මගහරවා ගෙන, වර්ධනය සීඝ්‍ර කර, රැකියා සුලබ කිරීමයි. එසේම අප මූල්‍ය ස්ථාවරතාවය ද ඇති කර ගත යුතුයි. මේවා හරිගස්සා නොගෙන සංවර්ධනය, ආයෝජනය හා රැකිරක්ෂා සුලබ කිරීම ඇති කර ගැනීමට නොහැකි වන අතර, ලිහිල් විනිමය හා ගෙවීම් පිළිවෙත, ආරක්ෂා කර ගැනීමට ද අපට නොහැකි වෙයි.

අප මේ සාර්ථක ප්‍රතිඵල ලබා ගත්තේ කෙසේද ? පෙර නොදුටු විරූ සංවර්ධන වැඩ පිළිවෙලකින් පමණයි. මෙතෙක් කල්, සහනාධාර සඳහා වැය කළ මුදල් වලින්, රාශියක් ආයෝජනයට හා සංවර්ධනයට යොමු කෙරුනා. ඊට අමතරව ඉතාම තිර්ලෝභී අන්දමින් ආධාර අපට ලැබුනා. ලෝක බැංකුව සහ ජාත්‍යන්තර ණය දෙන ආයතන සේම ආධාර දෙන රටවල්ද, මෙහිදී ස්තුති පූර්වකව මතක් කළ යුතුයි. ඒක පුද්ගල වශයෙන් බලන කල ලංකාව ඉතාම වැඩියෙන් විදේශාධාර ලබන රටක්.

දියුණුවන රටවල්, නොදුටු විරූ අන්දමේ සංවර්ධන වැඩ පිළිවෙලක්, ශ්‍රී ලංකාවට දියත් කරන්නට පුළුවන් වූයේ, මේ ආධාර නිසයි.

පසුගිය පස් අවුරුද්දේ අත්දැකීම් අනුව, මට පෙන්වා දිය හැක්කේ අප සතුව ඇති සම්පත් ප්‍රමාණය සීමාසහිත වන අතර, සීමාරහිත අවශ්‍යතාවයන් සපුරාලීමට එය ප්‍රමාණවත් නොවන බවයි. සීමාසහිත සම්පත් යනුවෙන් මා අදහස් කරන්නේ මුදල් පමණක් නොවෙයි. මිනිස් ශ්‍රමය, දක්ෂතාවය, පළපුරුද්ද, ඉඩම්, යන්ත්‍ර, අමුද්‍රව්‍ය ආදී සෑම දෙයක්ම මේ සීමිත සම්පත්වලට අයිතියි. රෙදි තිබෙන ප්‍රමාණය අනුව ඇඳුම සකස් කරගත යුතුයි.

අප ලබාගත් සාර්ථක ප්‍රතිඵල ගැන, කතා කිරීමෙන් සහ අතීතයත් වර්තමානයත් සංසන්දනය කිරීමෙන් පමණක්, අපට සෑහීමකට පත් වන්නට බැහැ. අප අනාගතය දෙස බලන්නට ඕනෑ. සමකාලීන ලෝක තත්ත්වය අනුව, අධ්‍යාත්මික හා භෞතික දියුණුවට අප අත්තිවාරම් දමා තිබෙනවා. අනාගතය විසින් අප ගෙන යන්නේ කොතැනටද ?

මේ රජය ඒ ගැනත් කල්පනාව යොමු කරනවා. අපේ තරුණ පරපුර තාක්ෂණික යුගයට ගෙන යාම අපේ බලාපොරොත්තුවයි. ඒ යුගය කොම්පියුටර් සහ රොබෝ යන්ත්‍රවලින් ක්‍රියා කරන යුගයක්. මේවාට අවශ්‍ය උපකරණ නිපදවීමේ මධ්‍යස්ථාන පිහිටුවීමටත්, අවශ්‍ය අධ්‍යාපනය ලබාදීමේ ආයතන පිහිටුවීමටත්, සැලසුම් දැනටම සකස් කර ගෙන යනවා.

මේ සඳහා අපේ තරුණ පරපුරට ලෝක භාෂාවක දැනුම අවශ්‍යයි. සිංහල හා දෙමළ ඉගැන්වීමේ මාධ්‍ය වන අතර, සිංහල රාජ්‍ය භාෂාව වෙයි. දෙමළ භාෂාව අද ජාතික භාෂාවක්. ඉංග්‍රීසි භාෂාවටද එබඳු තත්ත්වයක් ලබාදුනහොත්, සිංහල ජනතාව හා දෙමළ කතාකරන ජනතාව අතරත්, ජාත්‍යන්තරවත් සබඳකම් ඇතිකර ගැනීමේ භාෂාව වශයෙන් එය ප්‍රයෝජනවත් වෙනවා.

නවීන රාජ්‍යවල කටයුතු වඩ වඩාත් කළමනාකාරිත්වය දෙසට යොමු වෙනවා. රාජ්‍ය හා පෞද්ගලික අංශවල ව්‍යාපාර කළමනාකරණය සඳහා සුදුස්සන් වීමට අපේ තරුණයන්ට අවස්ථාවක් සැලසෙන පරිදි අපේ අධ්‍යාපනය ක්‍රමයෙන් සකස් කරනවා.

සමාජ පිළිවෙත හා හැසිරීම ඉතා ඉක්මණින් වෙනස් වෙනවා; ඉක්මන් හා පහසු ප්‍රවාහන සේවා ඇතිවීගෙන යනවා; ගුවන් විදුලිය, රූපවාහිනිය සහ පුවත්පත් මගින් අදහස් පැතිරෙනවා; රට එළි පෙහෙළි වෙනවා; මේ අයුරින් නොයෙක් අන්දමේ ප්‍රාණවත් පරිවර්තනයක් ඉබේම සිදුවී ගෙන යනවා. මේවා හුදෙක් බටහිර ක්‍රම අනුගමනය කිරීමක් හෝ දේශීය ක්‍රමවලට ආපසු යාමක් නොවෙයි. තරුණ පරපුරට අද අවශ්‍යව ඇත්තේ, ඉතිහාසය, විරාගත සම්ප්‍රදයයන් බැහැර කර, නිදහස්ව සිතන, නිදහස්ව ජීවත්වන ස්ත්‍රී පුරුෂයන් බවට පත්වීමටයි. ඔවුන්ගේ ඇස් ඉදිරිපිට බිහිවන, නව ලෝකයට, සරිලන පරිද්දෙන්, ජීවත් වන්නට අප ඔවුනට මග සලසා දීම අවශ්‍යයි.

**மாண்புமிகு உறுப்பினர்களே,**

நிறைவேற்று அதிகாரம் படைத்த முதலாவது சனாதிபதியாக, 1978, செப்ரெம்பர் 7 ஆந் தேதி பாராளுமன்றத்தைத் திறந்து வைத்தேன். 1983 பெப்ருவரி 9 ஆந் தேதியாகிய இன்று, நிறைவேற்று அதிகாரம் படைத்த இரண்டாவது சனாதிபதியாகப் பாராளுமன்றத்தைத் திறந்து வைக்கின்றேன். 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில், ஆரம்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி, சனாதிபதிக்கான தேர்தல் 1983 ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெறாமல், 1982 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நடைபெற்றமையால், சனாதிபதியின் ஆறாண்டுப் பதவிக்காலம் ஓர் ஆண்டினாற் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 20 ஆந் தேதி நடைபெற்ற சனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது. 1977, யூலை 21 ஆந் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில், நாம் மக்கள் முன்வைத்து, அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்தக் கொள்கைகளை, அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளமையை மக்கள் அங்கீகரித்துள்ளனர் என்பதை இந்த முடிவு இனிது காட்டுகின்றது.

1983, ஒகத்து மாதம் முடிவுறும் முதலாவது பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை ஆறு ஆண்டுகளுக்கு, அதாவது 1989 ஒகத்து மாதம் வரையில், நீடிப்பதற்காக 1982, திசெம்பர் 22 ஆம் தேதியன்று மக்கள் சம்மதத்தை நாம் கோரினோம். அக் கோரிக்கை மக்களால் அனுமதிக்கப்பட்டது.

**1977 ஆம் ஆண்டுக்குப்பின் உலகப் பொருளாதார நிலைமைகள்**

எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலடங்கிய வாக்குறுதிகள் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சில, இன்னும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை. விஞ்ஞாபனத்திலுள்ள ஒவ்வொரு சொல்லையும் எழுத்தையும் நாம் நடைமுறைப்படுத்தினாலும் எம்மை இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகள்—அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுடனும்; அபிவிருத்தியடைந்த நாடுகளுடனும் நாம் சேர்ந்து எதிர்நோக்கும் பிரச்சினைகள்—தொடர்ந்தும் இருக்கும். அவற்றை நாம் ஒருமித்து எதிர்நோக்க வேண்டிய நிலையிலும் உள்ளோம். அபிவிருத்தியடைந்த நாடுகளிலே பொருளாதார மந்தம் நிலவுகிறது; வேலையின்மை அதிகரிக்கிறது; எரிபொருட் செலவுகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன; வட்டி வீதங்களும் அதிகரித்துச் செல்கின்றன. இவற்றுடன், நாணய மாற்று வீதங்களிலே தளம்பல், பணவீக்கம்; உலக வணிகத்தின் வளர்ச்சிக் குறைவு; அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பெற்றோலியம் தவிர்ந்த ஏனைய முதனிலைப் பொருள்களின் விலை வீழ்ச்சி ஆகிய பிரச்சினைகளும் நிலவுகின்றன.

உலகளாவிய நோக்கில், நம்பிக்கை கொள்வதற்குக் குறுகிய காலத்தில் அதிக இடமில்லை. இவையனைத்தும் இலங்கையுட்பட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு இன்னல்களை விளைவித்துள்ளன. முற்றும் பாதகமான சர்வதேசப் பொருளாதாரச் சூழலில், நமது வளர்ச்சி உபாயத்தை நாம் பரீட்சித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதிலே குறிப்பிடத்தக்கது என்னவென்றால், சில அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தயக்கநிலை காட்டி வருகின்றன என்பதேயாம்; இதற்கு இலங்கை முதன்மையான ஓர் எடுத்துக்காட்டாகும்.

சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய், பெற்றோலிய உற்பத்திகள் ஆகியவற்றுக்கான இறக்குமதிச் செலவுகள் விரைவாக அதிகரித்துச் செல்வதாற் பாரிய வணிகப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. மொத்த இறக்குமதிகளில் இது ஏறத்தாழ 25 சதவீதமாகும், மொத்த ஏற்றுமதிகளின் வருமானத்தில் இதற்காக 42 சதவீதம் செலவாகிறது. 1977 இல் ஒரு பீப்பாவுக்கு ரூபா 114 ஆக இருந்த மசகு எண்ணெய் விலை, 1982 இல் ரூபா 718 ஆக உயர்ந்துள்ளமையே இதற்குக் காரணமாகும்.

நமது எரிபொருள் பிரச்சினையானது விலை—விநியோக நெருக்கடிக்கு உட்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர், மின்வலுவுக்கான தேவை மின்வலுவுக்கான விநியோகத்தை விஞ்சி விட்டது. வெப்பப் பிறப்பாக்கிகளுக்காக நாளொன்றுக்கு 30 இலட்சம் ரூபாவைச் செலவிட வேண்டியுள்ளது. 1977 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில், 2 சதவீதத்திற்கும் குறைவாகவிருந்த இந்தப் பிறப்பாக்கிகளின் பயன்பாடு, 1981 ஆம் ஆண்டில் 16 சதவீதத்திற்கு உயர்ந்தது.

எரிபொருளுக்கான தேவையில் ஏற்பட்டுள்ள இந்தத் துரித அதிகரிப்பு ஒருவகையில் சமூக, பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் நாம் பெற்றுள்ள முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கின்றது.

இப்போது எழுந்துள்ள பிரச்சினைகளுட் சில, வெளிநாட்டு உள்நாட்டுக் காரணிகள் காரணமாகச் சென்மதி நிலுவையில் சீர்கேடு உண்டாகியுள்ளமையாம். இறக்குமதிகள் 150 சதவீதத்திற்கும் மேலாக விரிவடைய, ஏற்றுமதிகள் 40 சதவீதத்துக்கும் குறைவாகவே விரிவடைந்துள்ளன. இந்தச் சமநிலையின்மைக்கான காரணிகளுட் பல, நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டனவாகும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஏற்றுமதி செய்யும் எல்லா மூலப்பொருள்கள் தொடர்பாகவும் காணப்படுவது போன்று, நமது ஏற்றுமதிகளுக்குச் செலுத்தப்படும் விலையானது, அபிவிருத்தியடைந்த நாடுகளின் இறக்குமதிகளுக்குச் செலுத்தப்படும் விலைகளில் அதிகரிப்பு உண்டானதற்கு ஏற்ப அதிகரிக்கவில்லை. பணவீக்கம் உயர்ந்த வீதத்தில் இருந்தது. அது, 1977–81 ஆம் ஆண்டுக் காலப் பகுதியிற் கடுமையாகக் காணப்பட்டது. அது இலங்கையில் 1982 ஆம் ஆண்டிலே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் நிலையான பற்றுக்குறை இருந்தமையால் நாம் வங்கி நிதியுதவியை நாடவேண்டிய அவசியமேற்பட்டது. வாழ்க்கைச் செலவு அதிகரித்து ஆபத்தான மட்டத்தை எட்டிப் பிடித்தது. இச்செலவினைத் தாங்கிக் கொள்வதற்குப் போதுமான வேதனங்களைச் சம்பாதிப்பதற்கு மக்களை அனுமதிக்கு முகமாக வேலைகளையும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதைத் தவிர எமக்கு உதவக்கூடிய வேறு வழிவகைகள் காணப்படவில்லை.

### சுதந்திர சமுதாயம்

சுதந்திரமான தார்மீக சமுதாயம் ஒன்றை அடையப்பெறுவதற்கான பிரேரணைகளைபற்றி எமது விஞ்ஞாபனத்திற் சுருக்கமாகக் கூறியுள்ளோம். 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பிலே சுதந்திரமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கான சனநாயக சுதந்திரங்கள், பாதுகாப்புகள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்துள்ளோம். சனநாயக நாடொன்றின் அடிப்படை யாதெனில், மக்கள், பொதுத் தேர்தல்களின் மூலம், காலத்திற்குக் காலம் ஓர் அரசாங்கத்தைப் பதவியிலிருந்து வெளியேற்றவும், அந்தவிடத்திலே மற்றோர் அரசாங்கத்தைப் பதவியில் ஏற்றவும் உரிமையுடையவர்களாவர் என்பதேயாகும். முன்னைய அரசியல் யாப்புகளிலே பாராளுமன்றத்தின மூன்றிலிரண்டு பெரும்பான்மை முடிபின் மூலம், தெரிவுசெய்யப்பட்ட ஒரு பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை இரு ஆண்டுக் காலத்திற்கு, அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு நீடிப்பது சாத்தியமாக இருந்தது. ஆயுட்காலம் முழுதுமே அதனைச் செய்யமுடியுமெனப் பொருள்படுமாறு, பாராளுமன்றத்திற் கூறப்பட்டது. (1973, நவம்பர் 28 ஆந் தேதியிடப்பட்ட ஹன்சாட்டிற் காண்க.)

இதனை, 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு, திருத்தியமைத்தது. மக்கள் தீர்ப்பின் மூலம் சனாதிபதியின் பதவிக்காலத்தை அல்லது பாராளுமன்றத்தின் ஆயுடகாலத்தை நீடிக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதுபற்றி மக்கள் முடிவுசெய்வதற்கு இந்த யாப்பு அனுமதியளித்தது. மக்கள் தீர்ப்பின்றி வாக்குரிமையில் அல்லது அரசியல் யாப்பிலே முதற்றடவையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகள் எதனிலும் தலையிடவே முடியாது.

முன்னைய அரசியல் யாப்புகளிலே கூறப்பட்டிருக்காத ஏனைய பாதுகாப்புகளையும், 1978 ஆம் ஆண்டின் யாப்பிலே நாம் உள்ளடக்கியுள்ளோம். எடுத்துக்காட்டாக, அரசாங்கம் அவசரகாலச் சட்டங்களை நடைமுறைப்படுத்தப் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறவேணடும் ; 3 மாதங்களுக்குப் பின்னர் அதனை நீடிக்கப் பாராளுமன்றத்தில், மூன்றிலிரண்டு பெரும்பான்மையினரின் அனுமதியைப் பெறவேண்டும். முன்னர், அவசரகாலப் பிரகடனம் பற்றி மட்டுமே பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது ; மேலும், 1971 ஆம் ஆணடிலிருந்து ஆறு ஆண்டுகளுக்குப் பாராளுமன்றத்தில் விவாதத்திற்குத்தானும் அனுமதியளிக்கப்படாமலேயே அவசரகாலச் சட்டங்களின்கீழ் இந்தநாடு ஆளப்பட்டது.

### தார்மீக சமுதாயம்

தார்மீக சமுதாயம் ஒன்றினை உருவாக்குவது மிகக் கடினமானது. சட்டத்தின் மூலமாக அல்லது அரசாங்க நடவடிக்கையின் மூலமாக மட்டும் அதனை உருவாக்க முடியாது. தார்மீக சமுதாயம் என்பது, மக்கள் தங்களுக்குத் தேவையான உணவையும், உடுப்பதற்கான உடைகளையும், வசிப்பதற்கான வீடுகளையும் பெறுவதற்கான நிதிவழிவகைகளைக் கொண்டிருப்பதனையே குறிக்கின்றதென நாம் கருதுகிறோம். இவற்றை ஒருவர் தமது சொந்த முயற்சிகளால் ; சுய வேலைவாய்ப்பினால் பெறலாம். அரசாங்கம் அல்லது தனியார் எவரேனும் வேலைகொடுப்போரின்கீழ் வேலை கொள்வதனால் அடையப்பெறலாம். அப்போது, வேலையின்மை நிலவாது ஒழியும் ; அல்லது வேலையின்மை ஒழியும் நிலையினை அடைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். வேலைசெய்யக்கூடிய ஒவ்வொரு பிரசையும் அவ்வாறான வேலைவாய்ப்பைப் பெறுவதற்குச் சந்தர்ப்பங்கள் இருத்தல் வேணடும்.

எனவே, நமது நாட்டின் வரலாற்றிலே மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். ஏனெனில், அபிவிருத்தியென்பது வேலைபெறுவதற்கான வாய்ப்பையும் செல்வத்தை உருவாக்குவதற்கான வழியையும் குறிக்கின்றது. அவ்வாறு உருவாக்கப்படும் செல்வமும் பெரும்பாலான மக்களிடையே பரவலாகப் பகிர்ந்தளிக்கப்படவும் வேண்டும். நாம் ஆரம்பித்துள்ள திட்டங்கள் அண்ணளவாக 1,35,110 மில்லியன் ரூபாயை உள்ளடக்கியுள்ளன.

பொருளாதாரம் புத்துயிர் பெற்றுள்ளது. தார்மீக சமுதாயமென்ற இலக்கை அடைவதற்கு அபிவிருத்தியை நாம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஆக்கியுள்ள ஒழுக்க நெறிக்கோவை அமுலாக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் உட்பட, உறுப்பினர்கள் எவருக்கும் எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுமிடத்து, அவர்களுக்கெதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்கும் வழக்கத்தைத் தொடர்ந்து பின்பற்றுவதற்கு நாம் கருதியுள்ளோம்.

ஆன்மீக, சமய நம்பிக்கைகளும், தாபனங்களும் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. சமய தாபனங்களின் புனிதமான கோட்பாடுகளை நடைமுறையிற் கொண்டொழுகுவதற்கும் போதிப்பதற்கும் உதவி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாகப் பௌத்த சாசனம் இதற்கு முன்னொருபோதும் இல்லாத வகையில் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றுள்ளது. இவ்வாறே, நாட்டின் கலாச்சாரத் துறையும் அரச ஆதரவுடன் செயற்பட்டு வருகின்றது.

**நாட்டின் நிலைமை 1978—1982**

1978–1982 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுக் காலத்திலே, நாட்டில் ஆட்சி செலுத்துவதற்கு எமக்களிக்கப்பட்ட காலத்திலும் இது ஓராண்டு குறைவான காலமாக இருந்தபோதிலும், பலமாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் பொருளாதார நிலைமை அதன் வளர்ச்சி வீதத்தினால் நிருணயிக்கப்படுகிறது. 1970–1977 ஆம் ஆண்டுக் காலத்திலே 3·5 சதவீத ஆண்டு வளர்ச்சி வீதத்தைக் கொண்டிருந்த இலங்கை, இந்த ஐந்தாண்டுக் காலத்தில் உண்மை நியதிகளின்படி 6 சதவீதத்திற்கும் மேலான உயர்ந்த சராசரி வளர்ச்சி வீதத்தைப் பெற்றுள்ளது. இவ்வீதம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சி வீதத்திலும் மிக உயர்ந்ததாகும். முதலீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக அதிகரித்துள்ளன. இக்காலத்தில் ஏறத்தாழ 11·2 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இப்பெறுபேறுகளை அடைவதற்காகப் பெரும்பாலான கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட்டன ; மேலும், ஒரு சந்தைப் பொருளாதாரமும் புகுத்தப்பட்டது. மானியங்களாகப் பயன்படுத்தப்பட்ட பணம் முதலீடுகளுக்குச் செலுத்தப்பட்டது. இதனைச் செய்திராவிடில், மானியத் தொகைச் செலவு பெரிதளவுக்கு அதிகரித்திருக்கும்; இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, சீனி, பால்உணவு, எரிபொருள் முதலானவற்றின் விலைகள் அதிகரித்தமையால் மானியத் தொகைச் செலவும் அதிகரித்திருக்கும். முன்னர், இப்பொருள்களுக்கு மானியம் வழங்கப்பட்டது. பின்னர், விலை அதிகரித்ததால் இவ்வுதவு தொகையெனும் பளுவை எந்த வரவு செலவுத் திட்டத்தாலும் தாங்கிக் கொள்ள முடியாது போயிருக்கும்.

மேலே சொல்லப்பட்ட மானியங்கள் ஒழிக்கப்பட்டாலும் தேவைப் பட்டோருக்கு மானியம் தொடர்ந்து வழங்கப்படுவதன்மூலம், அதாவது உணவு முத்திரைகள், பால் உணவு, போக்குவரத்து, மண்ணெய், வளமாக்கிகளுக்கான மானியத் தொகை, இலவசப் பாடநூல்கள் முதலானவற்றை வழங்குவதன்மூலம் ஆண்டொன்றுக்கு 3,000 மில்லியன் ரூபாய் செலவாகியுள்ளது. இலவசக் கல்வியும் இலவசச் சுகாதாரச் சேவைகளும் தொடர்ந்திருக்கின்றன.

அனைத்துச் சேவைகளையும் பொருள்களையும் அரசு வழங்குவதற்குப் பதிலாக—மானியத் தொகை வீதங்களை வழங்காவிட்டாலும் அரசினால் இச் சேவைகளுக்கான செலவுகளைத் தாங்கமுடியாது—இச்சேவைகளை மக்கள் பணஞ்செலுத்திப் பெறும் வகையிலே தனியார் துறையின் நிதிக்கும் முனைப்புக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக, போக்குவரத்துச் சேவைகள், மருந்து வகைகள், சில ஆதார உணவுகளின் இறக்குமதி என்பன இச் சேவைகளுள் அடங்கும். போக்குவரத்துச் சேவை நல்லதோர் எடுத்துக்காட்டாகும். அரசு, உலக வங்கியின் உதவியுடன் 1,500 வாகனங்களை இறககுமதி செய்தபோதிலும், மக்களுடைய போக்குவரத்துக்குத் தேவைப்படும் வாகனங்கள் அனைத்தையும் இறக்குமதி செய்ய முடியாது போயிற்று. எனினும், அரசாங்கத்துக்கு எவ்விதச் செலவுமின்றித் தனியார்துறை 7000 வாகனங்களை இறக்குமதி செய்துள்ளது. பிரயாணிகளின் நன்மைகருதி, அரசாங்கப் போக்குவரத்துச் சேவையுடன் தனியார் துறை போட்டியிட்டுச் சேவைகளை நிருவகித்து வருகின்றது.

ரூபாயை மிதப்பதற்கும், அதன் உண்மையான சர்வதேசப் பெறுமதியின் மட்டத்தை அடைவதற்கும் நாம் அனுமதித்தோம். அதனால், கறுப்புச் சந்தை வளர்ந்தோங்குவதைத் தடுத்துள்ளோம்.

சிறு பயிர்கள் செழித்தோங்கியுள்ளன. மிளகு, கறுவா, புகையிலை, மரமுந்திரிகைப் பருப்பு, வெற்றிலை, கோப்பி, கொக்கோ, ஏலம், கராம்பு ஆகியவற்றை நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம், பயிர்ச் செய்கையாளர் பெரும்பயன் பெற்றுள்ளனர். எனினும், கறுவா ஏற்றுமதி தொடர்பாகத் திடீரெனப் பிரச்சினைகள் தோன்றின; அதனைக் கொள்வனவு செய்த ஒரே நாடாகிய மெக்சிக்கோ நிதி நெருக்கடி காரணமாக அதனைக் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளது.

நெல் உற்பத்தி, தொடர்ந்து அதிகரித்து, 1981–82 பெரும் போகத்திலும், சிறுபோகத்திலுமாக 10,25,00,000 புசல் நெல் அறுவடைசெய்யும் நிலையினையடைந்தது.

கைத்தொழிற்றுறை தொடர்பாக, பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவின்கீழுள்ள சுதந்திர வர்த்தக வலயப் பகுதியிலே 155 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன. அவற்றுள், 1982 ஆம் ஆண்டின் இறுதியில் 52 திட்டங்கள் உற்பத்தியில் ஈடுபட்டன. இவை நேரடியாக ஏறத்தாழ 26,000 பேர்களுக்கும், மறைமுகமாக 45,000 பேர்களுக்கும் வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ளன. இந்தப் பகுதிக்கு வெளியே 106 புதிய தொழில் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத் திட்டங்களினால் ஏறத்தாழ 10,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் யாவும் முன்னைய ஆண்டுகளிலும் பார்க்கச் சிறப்பாகச் செயற்பட்டுள்ளன. கூட்டுத்தாபனங்கள் சில மிகச் சிறப்பாகத் தொழிற்பட்டுள்ளன. ஆயின், வேறு சில கூட்டுத்தாபனங்கள் குறைந்த மட்டத்திலேயே புறத்தீடுகளைக் கொடுத்துள்ளன.

வீடமைப்பு அமைச்சும் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் அரச உதவியுடனும் அவ்வுதவியின்றியும் ஏறக்குறைய 1,00,000 வீடுகளை நிருமாணித்துள்ளன.

மகாவலி கங்கையின் துரிதப்படுத்திய அபிவிருத்தித் திட்டத்தின் தலைமை வேலைகள் 1986 ஆம் ஆண்டின் இறுதியில் முற்றுவிக்கப்படும்—அதாவது, மதுறுஓய 1983 ஆம் ஆண்டிலும், விக்டோரியா 1984 ஆம் ஆண்டிலும், கொத்மலை 1985 ஆம் ஆண்டிலும், ரந்தெனிகல 1986 ஆம் ஆண்டிலும் முற்றுவிக்கப் படும். கீழ் நீரோட்ட அபிவிருத்தித் திட்டமும் பூர்த்திசெய்யப் படும்.

தேசியமயமாக்கப்பட்ட உற்பத்தி, விநியோகம், பரிமாற்றம் ஆகிய சாதனங்களின் பிரிவுகள் மாற்றப்படாமலே இருக்கின்றன.

நாட்டின் மூலவளங்களை விரைவாக அபிவிருத்தி செய்ய வேண்டிய அளவுக்கு அரசு தன்னளவிலே அவற்றை அபிவிருத்தி செய்ய முடியாது. எனவே, அரசாங்கத் துறையுடன் சேர்ந்து நாட்டை அபிவிருத்தி செய்வதற்குத் தனியார் மூலதனத்திற்கும் தனியார் துறைக்கும் நாம் வாய்ப்பளித்துள்ளோம். அத்துறைகளிலே தனிப்பட்ட பிரசைகள் போட்டியிடுவதற்கான வாய்ப்புகளை நாம் வழங்கியுள்ளோம். இப்போட்டியானது மக்களுக்கு, அதாவது நுகர்வோருக்கு, அனுகூலமானதாக அமைந்துள்ளது· அப் போட்டிக்குத் தொடர்ந்தும் இடமளிப்பதற்கு எண்ணியுள்ளோம்.

பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் வாயிலாகப் பெற்ற சில சாதனைகளைப் பற்றி மட்டுமே நான் குறிப்பிட்டேன்.

இவை கணிசமான சாதனைகளாகும் ; உலகம் எங்கணும் அபிவிருத்தியடைந்த நாடுகள் பொருளாதார மந்தத்தின் பிடியிற் சிக்குண்டும், அந்நாடுகளில் வேலையிலிருக்கும் 300 இலட்சம் பேர் வேலை வாய்ப்பை இழந்துமிருக்கும் வேளையிலே, ஓர் இக்கட்டான பொருளாதாரச் சூழலில், இச் சாதனைகள் பெறப்பட் டுள்ளன.

இலங்கையில் இதற்கு மாறான நிலைமையே நிலவுகின்றது. வேலையில்லாதிருந்தோர் வேலைவாய்ப்பைப் பெற்று வருகின்றனர் ; இந்நாட்டின் வரலாற்றில் என்றுமே கண்டிராதவாறு அபிவிருத்தி மிகவேகமாக நடைபெற்றுவருகிறது.

1977 ஆம் ஆண்டிலே நமது நாட்டின் பொருளாதாரம் சீர் குலைந்திருந்ததைக் கண்டோம். சனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டிருந்தது ; இளைஞர்கள் சிறையிலிடப்பட்டனர், அரசியல் எதிரிகளை அழிப்பதற்காக அவசரகாலம் பயன்படுத்தப் பட்டது. இப்போது, சனநாயகம் அமர்ந்திருக்க வேண்டிய உச்ச நிலையில் அதனை மீளமர்த்தியுள்ளோம். பொருளாதாரம் சீராக்கப்பட்டு வருகின்றது. வேலையற்றிருந்தோர், இன்று வீதி களில் தலைநிமிர்ந்து நடை போடுகின்றனர். உலகப் பொருளாதார நிலைமைகளினாலே தோன்றும் பட்டினிப்பேயை விரட்டியடிப்பதற்கு அவர்களுடைய வருமானமே உதவியாக இருக்கிறது. நாம் பின் பற்றி வருகின்ற வழியைத் தவிர, பின்பற்றக்கூடிய வேறு வழி எதுவும் இப்பொழுது இல்லை. இதனை உண்மையென மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் நம்மேல் வைத்துள்ள நம்பிக்கையை நிறைவுசெய்வது நமது கடமையாகும்.

**எதிர்காலம்**

வளர்ச்சிப் போக்கினை மேலும் ஊக்குவித்தற்பொருட்டும், வேலை

வாய்ப்புகளை மேலும் ஏற்படுத்தும் பொருட்டும் கைவரப்பெற்ற பயன்களின் மேலும் குறைபாடுகளைக் திருத்திக் கொள்வதன் மூலமும் நாம் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல் வேண்டும். அதனோடு, நிதியின் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தல் வேண்டும். இச்சிராக்கல்களின்றி வளர்ச்சியைப் பேணுவதும் முதலீட்டிலும் வேலைவாய்ப்பிலும் சாதனைகளைப் பெறுவதும், தாராள நாணயமாற்று, கொடுப்பனவுகள் சார்ந்தமுறைமை ஆகியவற்றை, தொடர்ந்து வைத்திருப்பதும் சாத்தியமற்றதாகும்.

இப்பயன்களை நாம் எவ்வாறு அடையப் பெற்றோம்? முன்னொரு போதுமில்லாத அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாகவேயாகும். மானியமாக இதுகாறும் செலவிடப்பட்ட பணத்திற் பெரும்பகுதி, அபிவிருத்தியில் முதலீடு செய்வதற்காகத் திசைதிருப்பப்பட்டது. இதனுடன் உலக வங்கி, ஏனைய சர்வதேசக் கடன் வழங்கும் நிறுவனங்கள், தாராள நன்கொடையளித்த நாடுகள் ஆகிய வற்றிலிருந்து கிடைத்த அளப்பரிய உதவியும் இவ்வபிவிருத்திக்குத் துணையாக அமைந்தது. ஆள் வீத வெளிநாட்டு உதவியை அதிக மாகப் பெற்றவர்களுள் நாமும் ஒருவராவோம்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள்ளே ஈடிணையற்றுக் காணப்படும் அபிவிருத்தித் திட்டத்தை இலங்கை மேற்கொள் வதற்கு இந்த உதவியே உறுதுணையாயிற்று.

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமொன்றையும் வலியுறுத்த விரும்புகின்றேன். அதாவது; வரையறைக்குட்பட்ட மூலதனங்கள் மட்டுமே இருக்கின்றன என்பதும், அவற்றைக் கொண்டு வரையறையற்ற தேவைகளை நிறைவுசெய்ய முடியாது என்பதும் கடந்த ஐந்தாண்டுகளில் நாம் பெற்ற அனுபவங் களாகும். வரையறுத்த மூலவளங்கள் பற்றிய உண்மை, நிதித் துறைக்கு மட்டுமன்றி, ஆற்றல்கள், மனிதவலு, காணி, மூலப் பொருட் சாதனங்கள் ஆகியவற்றுக்கும் பொருந்துவதாகும்.

சாதனைகளைப்பற்றி விளக்குவதோ, அன்றி நிகழ்காலத்தைக் கடந்த காலத்துடன் ஒப்புநோக்கித் திருப்தி கொள்வதோ போது மானதன்று.

நாம் எதிர்காலத்தை முன்னோக்கிச் செல்ல வேண்டும். சமகால உலக நிலைமைகளுக்கு ஏற்ப ஆன்மீகம்; லௌகீகம் ஆகிய வற்றின் முன்னேற்றத்துக்கான அடிப்படைகள் அமைக்கப்பட்டுள் ளன. எதிர்காலம் நம்மை எங்கே வழிநடத்திச் செல்கின்றது ?

இந்த அரசாங்கம் அதனையும் கவனத்திற் கொண்டுள்ளது. இயந்திர மனிதர்களையும் கணனிகளையும் முழுமையாகக் கொண்ட தொழினுட்ப சகாப்தத்திற்கு எம் இளைஞர்களை இட்டுச் செல்வ தற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். கல்விக்கான நிலையங்களை நிறுவு வதற்கும், தேவையான உபகரணங்களை ஒருங்கிணைப்பதற்கும் உற் பத்தி செய்வதற்குமான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நம் இளைஞர்கள் உலக மொழியொன்று பற்றிய அறிவுடையவர் களாகத் தங்களை ஆயத்தஞ் செய்துகொள்ள வேண்டும் என்ப தையும் இது குறிக்கின்றது. சிங்களமும் தமிழும் கல்வி பயிற்றும் மொழிகளாகும், சிங்களம் அரசகரும மொழியாகும். தமிழ் இன்று ஒரு தேசிய மொழியாக இருக்கின்றது. அதனையொத்த நிலைக்கு ஆங்கிலத்தை உயர்த்துவதால், அது, சிங்கள மக்களிடை யேயும் தமிழ் பேசும் மக்களிடையேயும் சர்வதேச மக்களோடும்

தொடர்பு கொள்வதற்கான ஓர் இணைபபு மொழியாகச் செயற் படுவதற்கு உதவும்.

அரசாங்கமும் மேன்மேலும் ஒரு முகாமிப்பு நிறுவனமாகி வருகின்றது. பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் வியா பார முகாமிப்பை மேற்கொள்வதற்கு மாணுக்கர் தங்களைத் தகுதி யுள்ளவர்களாக்கிக் கொள்ளும் பொருட்டு எமது கல்வி முறை மையைப் படிப்படியாக நாம் பொருத்தமுள்ளதாக்குவோம்.

சமுதாயப் பாங்குகளும் நடத்தைகளும் விரைந்து மாற்றமடைந்து வருகின்றன. இலகுவாகவும் விரைவாகவும் போக்குவரத்துச் செய் தல், வானொலி, தொலைக்காட்சி; வெளியீடுகள் ஆகியவற்றி னூடாகக் கருத்துக்களைப் பரப்புதல், நாட்டில் அபிவிருத்தியை உண்டாக்குதல் ஆகிய இன்னோரனன பல வகைகளில் விரைவு இயக்கமுடைய மாற்றங்கள் தம்மளவிலே ஏற்பட்டு வருகின்றன. மேனுட்டுக் கருத்துகளைப் பின்பற்றுவதாகவோ, அல்லது தேசிய வழிகளுக்கு மீண்டு செல்வதாகவோ இம்மாற்றத்தைக் கருத முடியாது. ஆயின், குறுகிய மனப்பான்மை, வரலாறு, பாரம் பரியங்கள் ஆகியவற்றை உதறித்தள்ளி, சுதந்திர மனிதராகச் சிந்திக்கவும் வாழ்வதற்குமான சுயாதீனத்தோடு இருப்பதற் காக இளைஞர்களிடையே காணப்படும் ஒரு தூண்டுதல் இதுவாகும். அவர்கள் முன்னிலையில் உருவாகிவரும் புதிய உலகினுக்குத் தங்களை ஏற்புடையவர்களாக்குவதற்கு அவர்களுக்கு நாம் உதவி யாதல் வேண்டும்.

*Hon. Members,*

I opened Parliament on September 7th, 1978, as the First Executive President, and today February 9th, 1983, I am opening Parliament as the Second Executive President. The President's period of office of six years was shortened by one year as the Presidential election was held in October 1982, and not at the end of 1983, as the 1978 Constitution originally provided for.

The 20th October Presidential election was won by the United National Party. The result was an endorsement of the implementation by the Government of the policies we placed before the People at the 21st July, 1977 General Election and which they accepted.

On the 22nd December, 1982 we sought the consent of the People to extend the life of the 1st Parliament, ending in August 1983, by six years, to August 1989. This was approved.

## WORLD ECONOMIC CONDITIONS AFTER 1977

Many promises in our Manifesto have been implemented. Some still need consideration. Even if we implement every word and syllable in the Manifesto the problems that face us today, which we face together with the entire Developing and Developed Nations will remain, and we have to face them together. There is a recession among the developed Nations ; rising unemployment ; continuing high energy costs

and interest rates ; volatile exchange rates ; inflation ; low growth of World trade and declining prices of primary products, other than petroleum produced in developing nations.

There is not much hope for optimism in the Global outlook in the short term. All these have led to difficulties for developing nations including Sri Lanka. Our growth strategy has had to be tried and tested in an entirely hostile international economic environment. What is remarkable is the resilience shown by some of the developing nations of which Sri Lanka is an outstanding example.

The rapidly rising import bill for crude oil and petroleum products has contributed its share to the huge trade deficits. It accounted for about 25 per cent of the total imports and absorbed 42 per cent of the total export earnings, because the price of oil which was Rs. 114 per barrel in 1977 rose to Rs. 718 per barrel in 1982.

Our energy problem has reached a price and supply crisis. After 1977 the demand for electricity outstripped its supply. Thermal generators had to be used costing Rs. 3 million daily. The proportion of this use which was less than 2 per cent during the pre-1977 period rose to 16 per cent in 1981.

This rapid growth in the demand for energy in a way reflects our progress in achieving socio-economic development.

Some of the problems that have arisen are the deterioration in the balance of payments caused by external and internal factors. Imports have expanded by over 150 per cent and exports have expanded by less than 40 per cent. Many of the factors for this imbalance are beyond our

control. The prices paid for our exports, as for all raw materials exported by the developing nations have not gone up corresponding to the increase in the prices paid for exports by the developed nations. There was a high rate of inflation which was serious in the 1977/81 period and has been controlled in the 1982 period in Sri Lanka.

A persistent Budget deficit made us resort to bank financing. The increase in the cost of living reached dangerous levels. We were left helpless to do anything except create employment and employment opportunities to permit the people to earn adequate wages to meet this cost.

### A FREE SOCIETY

We condensed our proposals in the Manifesto to mean the achievement of a Free and Just Society. In the 1978 Constitution we provided the democratic freedoms and safeguards for the creation of a Free Society. The basis of a democratic nation is that the people have the right from time to time at General Elections to vote a Government out of office and to install one in its place. In the earlier Constitutions by a two-thirds decision of Parliament it was possible to extend the life of an elected Parliament for two years or for a longer period of time. This was stated in Parliament to mean even for life. (Vide Hansard of 28th November, 1973).

The 1978 Constitution amended this, and permitted the people to decide at a Referendum whether the term of office of the President, or the life of Parliament should be extended or not. The Franchise cannot be touched without a Referendum ; nor can any of the Fundamental Rights which were included in the Constitution for the first time.

There are other safeguards in the 1978 Constitution which we have embodied which did not exist in the earlier Constitutions. For example Government under Emergency Laws needs the approval of Parliament ; after 3 months the approval of a two-thirds majority in Parliament. Previously Parliament was only notified of the declaration of an Emergency and from 1971 for six years this country was governed under Emergency Laws, without even a debate in Parliament being permitted.

## A JUST SOCIETY

The creation of a Just Society is more difficult and cannot be done by Legislation or by Government action alone. We feel that a Just Society means a Society where the people have the financial means to obtain, the food they need ; the clothes they wear ; houses to live in. This can be achieved by one's own efforts ; or by employment under an employer, State or Private. Unemployment has to cease to exist or steps have to be taken to achieve that end. Opportunities must be available to every employable citizen to find such employment.

We have therefore launched out on the biggest development programme in the history of our country ; because development means the opportunity for employment and the creation of wealth. That wealth must also be evenly distributed among the majority of the people. The programmes we have commenced involve an approximate expenditure of Rs. 135,110 million.

The economy has been revived and we have to continue that development to reach the goal of a Just Society.

The code of conduct we have outlined for our Members of Parliament has been implemented. Where charges against them, including Ministers have been proved we intend to continue the practice of dealing with them.

Spiritual and religious beliefs and bodies have been encouraged and given help to practise and preach, their Holy Doctrines.

The Buddha Sasana particularly has had the patronage of the State as it had never had before. It is so in the national cultural sphere too.

**THE STATE OF THE NATION 1978 -1982**

The five year period 1978 -1982, though it was one year less than the period we were voted to govern the country brought many changes. The economic state of a Nation is judged by its growth rate. Sri Lanka which had an annual growth rate of 3.5% during the period 1970-1977 achieved a high average growth rate of over 6 per cent in real terms during this 5 year period, well above the rate for developing nations. Investments reached 28 per cent of the Gross Domestic Product from 14 per cent. During this period about 1.12 million persons have been provided with employment.

To achieve these ends most controls were abolished and a market economy introduced. Money used for subsidies was shifted to investments. If this was not done the subsidy bill would have risen so high with the rise in the prices paid for imported rice, flour, sugar, milk food, oil etc. which were then subsidised that no Budget could have borne this burden.

In spite of the elimination of these subsidies the continuation of help to the needy, through food

stamps, milk food, transport, kerosene and fertilizer subsidies, free school books, cost Rs. 3,000 million per year. Free Education and Health Services continue.

Instead of the State providing all services and goods, which it cannot afford to do even at non-subsidised rates, private sector finance and initiative were given opportunities to provide some of these services for payment, eg. transport services ; pharmaceuticals, and import of certain basic food. The transport services are an example. The State could not afford to import all the vehicles necessary, even though 1,500 were imported with World Bank aid. The private sector has imported 7,000 vehicles with no cost to the Government and now manage a service competing with the State for the benefit of the traveller.

We allowed the Rupee to float and reach its true level of international value thus preventing a blackmarket from flourishing.

Our minor crops have flourished, and the export and the prices paid for pepper, cinnamon, tobacco, cashew nuts, betel leaves, coffee, cocoa, cardamon and cloves, have increased bringing good returns to the cultivators. Problems however suddenly arise as in the case of cinnamon, where our sole buyer, Mexico, has stopped buying owing to financial difficulties.

Paddy production has kept on increasing and rached 102,500,000 bushels in Maha and Yala 1981–1982.

Industrially too, in the Greater Colombo Economic Commission Free Trade Zone area 155 projects have been approved and 52 were in

production by the end of 1982 providing direct employment for about 26,000 people and indirectly for 45,000. New ventures outside this area numbering 106 have been approved. The total employment expected is within the region of 10,000.

Some of the State Corporations have done well but some have experienced low output levels. All have functioned better than during the previous years.

The Housing Ministry and the Urban Development Authority have built houses with and without State aid numbering about 100,000.

The Mahaweli Ganga Accelerated Development Programme Head Works will be completed by the end of 1986–viz. Maduru Oya in 1983, Victoria in 1984, Kotmale in 1985, and Randenigala in 1986. The Down Stream Development Programme will be completed.

Those sections of the means of Production, Distribution and Exchange which were nationalised remain unchanged.

The State cannot by itself develop the resources of the country at the rapid rate it should. We have therefore afforded private capital and the private sector the opportunity to develop the country side by side with the State Sector. We have afforded competition to them from private citizens. The competition has been to the advantage of the people, the consumer. We intend to continue that competition.

I have mentioned only some of the achievements in major development spheres.

These were not inconsiderable achievements and they were attained in a difficult economic

environment when the developed nations throughout the World were in the grip of a depression and 30 million employed in these countries lost employment.

Sri Lanka was the opposite : the unemployed were finding employment and development was proceeding more rapidly than ever in its history.

In 1977 we found a nation in economic shambles. Democracy throttled. Youth in Jail. Emergency used to destroy political opponents. We restored democracy to the pinnacle which it should occupy. The economy is on the road to recovery. Those who were unemployed walk the streets with heads held high. Their incomes alone help them to stave off starvation arising from World economic conditions. At present there is no other way to follow than the way we have adopted. The people have agreed that this is so and it is our duty to fulfil the Trust they have reposed in us.

## THE FUTURE

We have to build on the gains realised and correct the weaknesses in order to stimulate further the growth process and employment generation. We have also to provide financial stability. Without these corrections it will not be possible to sustain the growth, investment and employment achievements and continue the liberalised exchange and payments system.

How did we achieve these gains. Through an unprecedented development programme. Much of the money hitherto spent on subsidies was diverted to investment in development. To this was added the flow of generous aid, through the World Bank and other international lending institutions and generous donor countries. We

are one of the highest recipients of foreign aid per capita.

It was this aid which enabled Sri Lanka to undertake a development programme unparalleled among Developing Nations.

A lesson we must learn and which I wish to emphasize is that from our experiences of the past 5 years there are only limited resources and they cannot meet unlimited demands. Limited resources apply not only to finance, but skills, man power, land and material resources. We must cut our coat according to the cloth available.

It is not sufficient to dwell on achievements nor to be satisfied by comparing the Present with the Past.

We must look forward to the Future. The foundations for spiritual and material progress according to contemporary World conditions have been laid. Where does the Future lead us to.

This Government is considering that too. We hope to lead our Youth into the technological age, complete with robots and computers. Already plans are being prepared for the establishment of Centres for education and for the assembly and manufacture of the necessary equipment.

This also means our youth must equip themselves with the knowledge of a World Language. Sinhala and Tamil are the media of instruction and Sinhala is the Official Language. Tamil is today a National Language and the elevation of English to a similar position will enable it to act as a link language, between the Sinhalese

and Tamil-speaking people and with the International World.

Government is also becoming more and more a matter of management. We will gradually gear our Education system to help students to fit themselves for the Public and Private World of Business Management.

Social patterns and behaviour are also changing rapidly. Easier and quicker transport ; the spread of ideas through the radio, television and publications ; the opening up of the country ; and in many other ways dynamic changes are taking place on their own. It is not so much an adoption of Western ideas or a return to national ways but an urge among youth to be free to think and live as free men and women, sweeping away Insularity, History and Traditions. We must help them to adjust themselves to the New World opening before their eyes.

REFERENCE